# ‘‘கைத்தொலைபேசியால் விளையும் நன்மை தீமைகள்’’

கைத்தொலைபேசி என்பது நம் வாழ்க்கையுடன் இணைந்துவிட்ட ஒன்றாகும். மாணவர்கள் பலரிடம் கைத்தொலைபேசி உள்ளது. சில பள்ளிகள், கைத்தொலைப்பேசியைப் பள்ளிக்குக் கொண்டுவர மாணவர்களை அனுமதிப்பதில்லை. பள்ளி முடிந்த பின்புதான் அதைப் பயன்படுத்த முடியும் என்ற சட்டம் சில பள்ளிகளில் உள்ளது. மாணவர்கள் கைத்தொலைபேசியின் நன்மை தீமைகளை உணர்வதில்லை. ஆனால், பள்ளிகள் அவற்றை நன்கு அறிந்துள்ளன.

கைத்தொலைபேசி, பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சுலபமாகத் தொடர்புகொள்ளப் பெரிதும் உதவுகிறது. இதன்மூலம்தான் அவர்கள் தங்கள் பிள்ளைகள் இருக்கும் இடத்தை அறிந்துகொள்கிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நல்ல வழியில் கொண்டு செல்ல இது பெரிதும் உதவுகிறது. பள்ளி முடிந்த பின்பும் மாணவர்கள் தங்கள் பெற்றோரிடம் பேச முடிகிறது.

கைத்தொலைபேசியினால் நன்மைகள் ஏற்படுவதுபோன்றே தீமைகளும் சேர்ந்து ஏற்படுகின்றன. பெரும்பாலான மாணவர்கள் அதன் தீமையைப் பொருட்படுத்த மாட்டார்கள். அதிகமாக அதைப் பயன்படுத்தினால் ஆபத்துக்கள் பல ஏற்படும். சில மாணவர்கள் வீட்டிற்குப் போகும்போது சாலையைக் கடக்கும் போதும், கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டே கடப்பார்கள். இதனால், தங்களைச் சுற்றி நடப்பதை மறந்துவிட்டு கவனக்குறைவாக நடப்பார்கள். இதன் விளைவால் விபத்துக்குள்ளாவார்கள். இச்சூழலில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கைத்தொலைபேசி வாங்கிக் கொடுத்ததையும் அதைப் பள்ளிக்கு எடுத்துச் செல்ல அனுமதித்ததையும் எண்ணி வருந்துவார்கள்.

இன்னொரு தீமை, அவர்கள் தங்கள் படிப்பில் கவனத்தை இழந்து விடுவதாகும். மாணவர்கள், கணினியில் விளையாட்டுகள் விளையாடுவதுடன் அதில் பாடல்களும் கேட்பார்கள். இச்செயல்கள் பெரும்பாலான மாணவர்களின் கவனத்தைத் திசை திருப்பும். இதைத் தவிர்ப்பதற்குத்தான் சில பள்ளிகள் கைத்தொலைபேசியின் தீமைகளைப் பற்றி பல கருத்தரங்குகளை நடத்துகின்றன.

மாணவர்கள் கைத்தொலைபேசியை முறையாகப் பயன்படுத்த அறிய வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் கைத்தொலைபேசியால் விளையும் நன்மைகளை அனுபவிக்க முடியும்.

**சி. சிவப்ரியா**
**உயர்நிலை 1 உயர்தமிழ்**
**சிங்கப்பூர் சீனப் பெண்கள் பள்ளி**